மீதரவு இற்றைப்படுத்தல் மேம்பாட்டுச் செயற்றிட்டம் **2024**

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | மீதரவு இற்றைப்படுத்தல் மேம்பாட்டுச் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | |
| செயற்றிட்ட இடம் | நூலக நிறுவனம், இலங்கை. |
| செயற்றிட்ட காலம் | 12 மாதங்கள் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நூலகநிறுவனங்கள்,பணியாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் |
| பாதீடு (Budget) | |

நூலக நிறுவனம் அறிமுகம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது. அவ்வகையே இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளதுடன் பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது. இதுவரை காலமாக மொத்தமாக 102500 இற்கு மேற்பட்ட ஆவணங்களை ஆவணப்படுத்தி திறந்த அணுக்கத்திற்கு வழங்கியுள்ளது.

செயற்றிட்டச் சுருக்கம்

நூலக நிறுவனம் பல்வேறு விதமான செயற்றிட்டங்களுக்கூடாக ஈழத்து தமிழ் பேசும் சமூகங்களினுடைய ஆவணங்களை ஆவணப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது. அதிலும் எமுத்தாவன மற்றும் பல்லூடக ஆவணம் சார்ந்த வெவ்வேறு செயற்பாடுகளை செய்து வருகின்றது. குறிப்பாக ஆவணப்படுத்தல் சார்ந்து ஈழத்து தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஆவணங்களை திரட்டுதலை மையமாகக் கொண்டு அதன் வேலைத் திட்டங்கங்கள்சேகரஅபிவிருத்தி மற்றும் எண்ணிமவாக்கம் சார்ந்து 2005 முதல்

மேற்கொள்ளபட்டு இன்று வரை மொத்தமாக 102500 ஆவணங்களை திரட்டியுள்ளது அவற்றை ஆய்வு சார்ந்தும், திறந்த அணுக்கத்திற்கான உசாத்துணைகள் சார்ந்தும், வகைப்பாடுகள் சார்ந்தும் அறிவுப்பரவலாக்கம் செய்வதற்கான மீதரவுகளை சரிபார்த்தலும் அவற்றை நிவர்த்தி செய்தலும் இன்றியமையாத ஒரு தேவைப்பாடாக இருந்து வருகின்றது. இதன் அவசியம் உணரப்பட்டு நூலக பணியாளர்கள் இருவர் மீதரவு இறறைப்படுத்தலுக்கான பயிற்சிகளைப் பெற்று இச்செயற்றிட்டத்தினை மேற்கொள்ளவுள்ளவர்.

## இலக்கு

நூலக நிறுவனத்திலுள்ள ஆவணங்களுக்கான சரியான மீதரவு இற்றைப்படுத்தலை மேற்கொள்ளுதல்.

## நோக்கங்கள்

- பதினொரு மாத காலப்பகுதிக்குள் எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களை மீளபார்வையிட்டு அவற்றுக்கான மீதரவை உரிய வகையில் வழங்குதல்

- இரு புதிய பணியாளர்கள் இச்செயற்றிட்டத்திற்காக அமர்த்தப்பட்டு எண்ணிம நூலக செயற்பாடுகளில் மீதரவு சார்ந்து ஓர் தெளிவினை பெற்றுக்கொள்வர். குறிப்பாக மூன்று கால மாதத்திலுள் பொதுவாக நூலகம் சார்ந்த மீதரவு செயற்பாடுகள் சார்ந்து இரு பணியாளர்கள் முழுமையான பயிற்சிகளை பெற்றுக்கொள்வார்கள்.

- எமது செயற்றிட்டம் ஊடாக 12 மாதங்களில் எண்ணிமப்படுத்தி பதிவேற்றப்பட்ட ஆவணங்களூடாக உரிய மீதரவுடன் அறிவுப்பரவலாக்கத்தினை இணையவழியில் திறந்த அணுக்கத்தில் பெறத்தக்கதாக இருக்கும்.

## செயற்பாடுகள்

- செயற்றிட்ட அறிமுகமும் செயற்றிட்ட தேவைப்பாடுகளும் தொடர்பாகவும் இரு பணியாளர்களுக்கும் பகிர்ந்து கொள்ளுதல்.

- செயற்திட்ட வடிவமைப்பு
  பங்குத்தாரர்களின் உள்ளீட்டைப் பெற்று, ஒத்த செயற்திட்டங்ளை மீளாய்ந்து, செயற்திட்டத்தை செழுமைப்படுத்தல். இந்தச் செயற்பாட்டின் விளைப்பொருளாக துல்லியாக திட்டமிடல்
  1. நூலக நிறுவனதால் எண்ணிமப்படுத்தப்பட்ட 102500 ஆவணங்களை பட்டியற்படுத்தல்.
  2. அதற்கான பதிவேற்றல் அனுக்கத்தை வழங்குதல் புதிய பணியாளர்களுக்கு வழங்குதல். அதற்கான பயிற்சியளித்தல்.
  3. நூலக பதிவேற்றம், மீதரவு இற்றைப்படுத்தல் பயிற்சிகளை

வழங்குதல்

- நூலக நிறுவன பணியாளர்கள் மற்றும் துறை சார் வல்லுனர்கள் இணைந்து பயிற்சிகளை ஒழுங்குபடுத்தல், உள்ளீடுகளை விரிவுபடுத்தல்
- வாராந்த கலந்துரையாடல் ஊடாக மீதரவு சார்ந்த ஆலோசனைகளை பெற்று செயற்பாடுகளைத் தொடர்தல்.

இடர்முகாமை

- பயிற்சியின் பின்னரான ஆவணப்படுத்தல் சார்ந்து அடைவுகள் ஆரம்பங்களில் குறைவானதாக காணப்படலாம். அதற்காக பயிற்சிகளை வாரம் ஒருமுறை உறுதிசெய்தல்.

- முதற்கட்டமாகவே இந்தச் செயற்றிட்டம் நடைபெறும் என்பதை அனைத்து பங்குத்தாரர்களுக்கும் மற்றும் துறைசார் அலுவலர்களுக்கும் சிறந்த புரிதலை ஏற்படுத்தி அதனூடாக ஆவணப்படுத்தல் செயற்பாடுகளை முன்னகர்த்த முடியும்.

- தொழில்நுட்பம் சார்ந்த விடயஙகளில் சவால்கள் ஏற்படலாம். மீதரவு சார்ந்த இற்றைப்படுத்தல்களை வாரம் ஒருமுறை உறுதிப்படுத்தி மீளாய்வு செய்தல்.

எதிர்பார்க்கப்படும் அடைவுகள்

- எம்மால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களுக்கான ஒரு முழுமையான மீதரவு உருவாக்கப்பட்டிருக்கும்.
- வாசகர்களுக்கு தேவையான ஆவணங்களை வலைத்தளாத்தினூடாக பெறத்தக்கவகையிலான அமைப்பை நூலக நிறுவன வலைத்தளம் கொண்டிருக்கும்.
- எதிர்வரும் காலங்களில் இதே செயற்பாட்டை தன்னிச்சையாக முன்னெடுப்பதற்கான திறன்கள் விருத்தி செய்யப்பட்டிருக்கும்.

எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
[https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132](https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132)